

காஞ்சி தெற்கு மாவட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் 48 கிலோ கேக் வெட்டி கோலாகலமாக கொண்டாடப்பட்டது. காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ கேக் வெட்டி ஏழை எளியவர்களுக்கு வழங்கினார். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாள் விழா சாலவாக்கம் பஜார் பகுதியில் நேற்று காலை கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் டி.குமார், ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல் முன்னிலை வகித்தார். கிளை செயலாளர் எஸ்.ஆர்.வெங்கடேசன் அனைவரையும் வரவேற்றார். 48 திமுக கழக முன்னோடிகள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ கேட்கினை வெட்டி சிறுவர் சிறுமியர், பெண்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள், வணிகர்கள் ஆகியோருக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ரவி, ஞானசேகர், தமிழ்வேந்தன், சுஜாதா ஜெயராமன், பாலமுருகன், பாண்டியன், பாபாஷரீப், சிவராமன், துரை வேலு, ரவி, கார்த்திகேயன் , மணி, ரத்தினமாலா, சேகர்,அன்புராஜ், சுப்பிரமணியன், கல்யாணசுந்தரம், பவுன் சின்ராஜ், நதியா கோபி,வெங்கட்ராமன், முரளி,பலராமன்,விஷ்ணு, அழகப்பன், நடராஜன், ஊராட்சி மன்ற தலைவர்கள் தர்மராஜ், சுந்தரமூர்த்தி, கார்த்திகேயன், நாகம்மாள் மாரி, மஞ்சுளா முருகன், நந்தா, இந்திரா மோகன், , கோதண்டராமன், ஜெயகாந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - நா.எழிலன் - வினோத் வேலாயுதம் - கௌதமன் பங்கேற்பு!

# 112 ‘அ’ வட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## வட்டச் செயலாளர் மு.மோகன் வேண்டுகோள்!

சென்னை, நவ.27-

வட்டச் செயலாளர் மு.மோகன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி , 112’அ’ வட்டக் கிளை சார்பில் மாநில இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (27.11.2024 - புதன்கிழமை) காலை 9 மணி அளவில் புலியூர் 1வது லேனில் உள்ள அலுவலகத்தில் வட்ட செயலாளர் மு.மோகன் தலைமையில் பகுதி அவைத் தலைவர் புவி. பாலாஜி பகுதி துணைச் செயலாளர்கள் என்.பி. இதயாத் பாஷா, ஸ்டெர்லிங் மோகன், ரா.பொன்னம்மாள், பொருளாளர் பா.கமலக்கண்ணன், முன்னிலையில் வட்ட கிளை நிர்வாகிகள் கு. பாண்டியன், ச.யுவராஜ், இ.வசந்தா, இ.கந்தசாமி, த.பூபாலன், சு.நரேந்தர், மா.என்ட்ரி சாமுவேல், இரா. தனசேகர், க.ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குகிறார்.

வட்டத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, கழக அமைப்பு இணைச்செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் அணிச் செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் வே.கௌதமன் கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்குகின்றனர்.

வழங்குகின்ற இடங்கள் : வட்ட பகுதி பிரதிநிதி, தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ஜி.வி.சரவணன் ஏற்பாட்டில் புலியூர் தமிழ்நாடு ஹவுசிங் போர்டு கோட்ரசிலும், இரா.தனசேகரன் ஏற்பாட்டில் சிவன் கோவில் தெற்கு தெருவிலும், வட்ட அவைத் தலைவர் கு.பாண்டியன் ஏற்பாட்டில் புலியூர் 2 -வது லேன், பகுதி பிரதிநிதி வி.நரேந்திரன் ஏற்பாட்டில் டிரஸ்ட்புரம் 9-வது தெருவிலும், வட்டத் துணை செயலாளர் இ. வசந்தா ஏற்பாட்டில் டிரஸ்டுபுரம் 7-வது தெருவிலும், வட்டப் பொருளாளர் இ.கந்தசாமி ஏற்பாட்டில் டிரஸ்டுபுரம் 7-வது தெருவிலும், பாரதீஸ்வரர் காலனி 1வது தெருவில் வட்ட முன்னாள் அவைத் தலைவர் ஆர். ராஜசேகர் ஏற்பாட்டிலும் டிரஸ்டுபுரம் 6 வது தெரு மாதா கோவில் அருகில், பகுதி பிரதிநிதி க.ஜெயக்குமார் ஏற்பாட்டிலும் சிவன் கோயில் தெருவில், பாகத் தலைவர் இ.ரவி ஏற்பாட்டிலும் சிவன் கோவில் தெருவில், பாக உறுப்பினர் ஜி.சத்தியா ஏற்பாட்டிலும் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட இருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் பி.எல்.ஏ-2, பி.எல்.சி உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள்.

இவ்வாறு வட்டச் செயலாளர் மு.மோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119வது வட்டம் சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! 500 நபர்களுக்கு அறுசுவை உணவு!

## வட்டச் செயலாளர் க.வே.மோகன் அறிவிப்பு!

சென்னை, நவ.27-

சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119வது வட்டம் சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

இது குறித்து வட்டச் செயலாளர் க.வே.மோகன் கூறியிருப்பதாவது:-

சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119வது வட்டம் சார்பில் இன்று (27.11.2024, புதன் கிழமை) காலை 11.30 மணியளவில் வி.எம்.தெரு கழக அலுவலகத்தில் வட்டச் செயலாளர் க. வே.மோகன் தலைமையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக கொடியேற்றி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., பகுதி கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் எம்.சி., த.பெ.உ. திருமதி கமலா செழியன், த.பெ.உ. ரவிராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.என்.துரை, வி.என்.ராஜன், வீ.பி.பென்னரசு, கே.திருநாவுக்கரசு, டாக்டர் சுபேர்கான், டாக்டர் ஆர். எஸ்.உல்லா, ஆர்.பத்மாவதி, ஆர். ரஞ்சித்குமார், எல்.பாலு, எஸ்.ரவீந்திரன், க.பாலாஜி, பி.திவ்யா, இ.மாரி, பி.சேகர் மற்றும் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகிறார்!

# நங்கநல்லூரில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா! அறுசுவை உணவு!

## பகுதிச் செயலாளர் என்.சந்திரன் அறிக்கை!

சென்னை,நவ.27-

ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் - 12வது மண்டல குழு தலைவர் என்.சந்திரன் அறிக்கை வருமாறு:

துணை முதல்வர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஆலந்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழகச் செயலாளரும் பன்னிரண்டாவது மண்டல குழு தலைவருமான என்.சந்திரன் ஏற்பாட்டில் நங்கநல்லூர் 100 அடி ரோட்டில் உள்ள ஸகேடிங் கிரவுண்டில் துப்புரவு பணியாளர்கள், ஏழை எளியோர் 500 நபர்களுக்கு காலை 10.30 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் குரு சிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் பிரியாணி வழங்கினார்.

எனவே ஆலந்தூர் தெற்கு பகுதிக்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்டகழகசெயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள்,வாக்குச்சாவடி முகவர்கள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தள்ளார்.

### தலைமை: மு.இ.ஏழுமலை! முன்னிலை நந்தனம் கி.மதி எம்.சி.!

# 123 வது வட்ட கழகம் முழுவதும் துணை முதல்வர் பிறந்தநாள் கொண்டாட்டம்!

### மயிலை த. வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பங்கேற்பு!

## வட்ட செயலாளர் மு.இ. ஏழுமலை அறிக்கை!

சென்னை,நவ.27-

இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட திமு கழகத்தின் சார்பில், இன்று 27.11.24 புதன்கிழமை மற்றும் ஒரு மாத காலம் 27.11.24 முதல் 27.12.24 வரை, அனைத்து ஞாயிற்றுக்கிழமை தோறும், 123வது வட்ட திமு கழகம் சார்பில் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளகள், துனை அமைப்பாளகள், கழக மூத்த முன்னோடிகள், மற்றும் கழக உடன் பிறப்புகள் ஆகியோர் ஏற்பாடு செய்து கீழ்கண்ட தெருக்கள் தோறும் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும், கழக கொடி ஏற்றி, இனிப்புகள், அறுசுவை உணவுகள் மற்றும் நல திட்ட உதவிகளை,

வட்ட செயலாளர் மு இ ஏழுமலை தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி எம்.சி, முன்னிலையில், மாவட்ட செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. மற்றும் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் பங்கேற்று வழங்குகின்றனர்.

நிகழ்ச்சி நடைபெறும் தெருக்களின் விவரம் பின்வருமாறு.

1. கவிஞர் பாரதிதாசன் சாலை 2.வன்னியபுரம், 3. அப்பாதுரை, ராஜி நாயக்கன் தெரு, 4.பக்தவச்சலம் தெரு, 5.திருவள்ளூர்சாலை சந்து, 6.வ உ சி தெரு, 7.திருவள்ளுவர் சாலை, 8.எல்டாம்ஸ் சாலை , 9. இராமலிங்கேஸ்வரர் கோவில் தெரு, 10.பெரியார் சாலை மார்கெட், 11.பெரியார் சாலை, 12.காமராஜர் தெரு, 13.வெங்கட்ராமன் தெரு, 14.காமராஜர் சாலை, 15. ஜெகநாதன் தோட்டம் , 16.கரிமேடு அன்பகம் சந்திப்பு 17.இராமசாமி தெரு, 18.ரீராம் காலனி, 19.டாக்டர் ரங்கா ரோடு, 20.சி வி ராமன் தெரு, 21.பீமன்ன இரண்டாவது தெரு, 22.பீமன்ன முதல் தெரு, 23 கால்வாய் கரை சாலை, 24.இலுப்பை தோப்பு,

123வது வட்ட திமு கழக, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளகள், துனை அமைப்பாளகள், கழக மூத்த முன்னோடிகள், மற்றும் கழக உடன் பிறப்புகள் ஆகியோர் ஏற்பாடு செய்து இருக்கும்,

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும், 123 வது வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், BLA2 / BLC நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

என வட்ட கழக செயலாளர் மு இ ஏழுமலை அறிக்கை விடுத்துள்ளார்.




திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளரும் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆலோசனை படி மாபெரும் கிரிக்கெட் போட்டி ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுகள் தொகை வழங்கினார் அருகில் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ், கே.கே.சொக்கலிங்கம், கே.தரணி, டி.கே.சீனிவாசன், எஸ். சௌந்தரராஜன், த.சுகுமார், டி.கே.பூவண்ணன், வி.ஜெ.உமா மகேஸ்வரன், வி.தியாகராஜன், கே.சரவணன், அருண் கீதன், சிவப்பிரகாசம், எம்.கார்த்திக், சதீஷ், கா.ரோ.கார்த்திக், சக்திவேல், வேலுதம்பி, பாஸ்கர், திவிகர், பிரபு, வி.சங்கர், பாலசந்தர், சித்ராசெந்தில், பி.விக்ரம், திருமலை, கிருஷ்ணன், முருகன், பிரான்சீஸ், ஜி. சரவணன், எம்.டி.பாலாஜி, சி.ராஜி, விக்கி, சண்முகம், சற்குணம், சீனு, செல்வி, கணகவள்ளி, உதயநிதி, கதீர், மீராசா, கருணாகரன், பிரபாகரன், ஜாகீர், மதன், கோவிந்தராஜ், பரத், மம்மையன், ஆறுமுகம், சக்திவேல் ஜெய்கீதன், ஜார்த்தணன், ராஜினி, சம்பத், பாபு, செல்வம், சரண்ராஜ், குரு, அசீஸ், எஸ்.சத்திய, உள்பட பலர் உள்ளனர்








சென்னை. எழும்பூர், தொன் போஸ்கோ சீனியர் செகண்டரி (CBSE) பள்ளியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (26.11.2024) பள்ளிக் கல்வித் துறை சார்பில் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறை தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கினை தொடங்கி வைத்து, குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல், தடுத்தல் குறித்த ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் திருமதி சோ. மதுமதி, பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், பெருநகர சென்னை மாநகராட்சி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப்பிரிவு துணை காவல் ஆணையர் முனைவர் ஜி.வனிதா, மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் இணை இயக்குநர் (ஒய்வு) முனைவர்.ஏ.என்.ராஜ் சரவணக்குமார், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர். மு.பழனிசாமி, தொடக்கக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர். சீ.ஆ.நரேஷ், மதுரை அரசு சட்டக்கல்லூரி கௌர விரிவுரையாளர், முதன்மைச் சட்ட உதவிப் பாதுகாப்பு ஆலோசகர் எஸ்.சிவகுமார், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் திருமதி.த.உமா, மற்றும் உயர் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (26.11.2024) நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களிடம் ரெப்கோ வங்கியின் தலைவர் இ. சந்தானம், 2023 – 2024 ஆம் நிதியாண்டிற்கான தமிழக அரசின் பங்கு மூலதனமான ரூ.7.13 கோடிக்கான 25% ஈவுத் தொகையான ரூ.1.78 கோடிக்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வின் போது பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், மறுவாழ்வுத் துறை ஆணையர் பி. கிருஷ்ணமூர்த்தி, IOFS. மற்றும் ரெப்கோ வங்கியின் நிர்வாக இயக்குநர் (பொறுப்பு) ஓ.எம். கோகுல் ஆகியோர் உள்ளனர்.

## முதலமைச்சர் பதிவுத்துறை புதிய கட்டிடத்தை திறந்து வைத்து தொடர்ந்து

# திருத்தணியில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பார்வையிட்டு இனிப்பு வழங்கினார்!

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ பங்கேற்பு

திருவள்ளூர் 27

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதிவுத்துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலக கட்டடத்தினை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து நிகழ்வில்

சிறுபான்மையின் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

திருத்தணியில் பதிவுத்துறை சார்பில் ரூ.1.63 கோடி மதிப்பீட்டில் 1624.76 ச.அடியில் தரைத்தளம்,1624.76 ச.அடியில் மேல் தளமும் மொத்தம் 3249.52 ச.அடி பரப்பளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலக கட்டடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். இந்த அலுவலகத்தில் தரைத்தளத்தில் பார்வையாளர் காத்திருப்பு அறை, கணினி அறை, சார்பதிவாளர் மேடை கழிப்பறை வசதிகள், மேல் தளத்தில் பதிவேடுகள் அறை, இருப்பு அறை கழிப்பறை போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது என சிறுபான்மையின் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அவர்கள் தெரிவித்தார் இந்நிகழ்வில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, நகர மன்றத் தலைவர் சரஸ்வதி பூபதி, நகரச் செயலாளர் வி. வினோத் குமார், நகர மன்ற துணை தலைவர் சாமிராஜ், துணை பதிவுத்துறை தலைவர் சாமிநாதன், செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை தேவன், மாவட்ட பதிவாளர் பாவேந்தன் , திருத்தணி சார் பதிவாளர் சுகன்யா, திருத்தணி வட்டாட்சியர் மலர்விழி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் எம்.மிதுன் சக்ரவர்த்தி, கே.எம்.எஸ். சுப்பிரமணியம், ஒன்றிய நகர செயலாளர்கள் கூளூர் ராஜந்திரன், என்.கிருஷ்ணன், சி. ஜெ . சீ னி வா ச ன் , கே.ராஜந்திரன், சி.என்.சண்முகம், பழனி, பி.டி.சந்திரன், டி.ஆர்.கே.பாபு, ஒப்பந்தந்தார் கமலக்கண்ணன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்

# 172 அ வட்டத்தில் பல்வேறு இடங்களில் இனிப்பு உணவு !

## வே.முருகன் முன்னிலையில் இரா.துரைராஜ் வழங்குகிறார்

சென்னை, நவ. 27

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சைதை கிழக்கு பகுதி 172 அ வட்டத்தில் நாளை நவம்பர் 27 அன்று பிறந்தநாள் காணும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அ மை ச் ச ர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின் படி சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டத்தில் மாவட்ட பிரதிநிதி வே.முருகன் முன்னிலையில் முன்னிலையில் மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ் கலந்துகொண்டு உணவுகள் வழங்குகிறார்

தொடர்ந்து 172 அ வட்டத்தில் பின்வரும் இடங்களில் கழகக் கொடி ஏற்றி இனிப்பு மற்றும் உணவுகள் வழங்குதல் குறித்து பின்வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. நேரு நகரில் தி.கோகுல் தலைமையில் கொடி ஏற்றி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். கன்னி காபுரத்தில் ராஜேஷ் தலைமையில் கொடி ஏற்றி 500 நபர்களுக்கு காலை உணவு வழங்கப்படுகிறது. கணபதி நகரில் பாலகிரன், பிரசாந்த், செஞ்சுகிரன், நரேஷ் அவர்களின் தலைமையில் 500 நபர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் 172 அ வட்டத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்துகொள்கின்றனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் - சென்னை தெற்கு மாவட்டம்

# வேளச்சேரி மேற்கு பகுதியில் - இன்றைய நிகழ்ச்சிகள்!

## பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் அறிவிப்பு

சென்னை,நவ.27-

மேற்கு வேளச்சேரிப் பகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் பின்வரும் விவரப்படி இன்று நடைபெகிறது என பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் அறிவித்துள்ளார்.

1. க.பாரதி தாசன் தலைமையில் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல்

பகல் 10.00 மணி இடம்: கலைஞர் படிப்பகம் அண்ணா தெரு நேரு நகர் 2. இ.சதீஷ்குமார் தலைமையில் கழக கொடியேற்றி மதிய உணவு வழங்குதல் காலை 11.30 மணி இடம்: நேரு நகர்

3. வி.சக்திவேல் தலைமையில் நாளை காலை 7 மணி அளவில் காந்திநகர் ஏரிக்கரை தெருவில் அமைந்துள்ள வள்ளலார் காப்பகத்தில் ஆதரவற்ற முதியோர் மற்றும் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்படுகிறது.

4. எஸ்.முருகவேல் தலைமையில் மாலை 5.00 மணிக்கு நலத்திட்ட உதவிகள் 500 பேருக்கு 5 கிலோ அரிசி, போர்வை வழங்கும் இடம் வெங்கடேஸ்வரா நகர் 2வது குறுக்கு தெரு

5. 177 வது வட்டத்தில் காலை 8 மணி நியூ காலனியில் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல்.

6. 177 'அ' வட்ட கழக செயலாளர் ஜி. பி. எஸ். பாலசதீஸ் நிகழ்ச்சி ஏற்பாடு டி.மகாலிங்கம் உதயநிதி இளைஞர் நற்பணி மன்றம்.

காலை 8.30 மணி கோகிலம் தெரு கலைஞர் சிலை அருகில் கழகக் கொடியேற்றி 200 பேருக்கு காலை உணவு வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு மு எத்திராஜ் கலைஞர் செம்மொழி மன்றம்.

காலை 9:30 மணி காந்தி சாலையில் கழக கொடி ஏற்றி 200 பேருக்கு காலை உணவு வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு அ.ஜார்ஜ் (வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்)

பகல் 12 மணிக்கு வேளச்சேரி தரமணி 100 அடி சாலையில் ராமகிரி நகர்

கழக கொடி ஏற்றி 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்குதல்

நிகழ்ச்சி ஏற்பாடு கே பி சாரதி (பகுதி கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் முப்பெரும் தலைவர்கள் நற்பணி மன்றம்.

Msc LLB அவர்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சிகள்.

1) டான்சி நகர் 2 வது தெரு(ராயல் ஷாப் அருகில்) இரு வண்ண கழக கொடிஏற்றி 500 பேருக்கு இனிப்பு மற்றும் காலை சிற்றுண்டி வழங்குதல்.

2) தண்டீஸ்வர நகர், இனமான காவலர் பேராசிரியர் நற்பணி மன்றம் சார்பில் கழக கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கல்.

3) வேளச்சேரி மெயின் ரோடு,தே. ஜெகன்நாதன் நினைவு மன்றம் சார்பில் கழக கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்குதல்.

4) தெலுங்கு பிராமின் தெரு,குறிஞ்சி மலர் தளபதி மு. க. ஸ்டாலின் நற்பணி மன்றம் சார்பில் கழக கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்குதல்.

5) பஜனை கோவில் தெரு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் நற்பணி மன்றம்சார்பில் கழக கொடிஏற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்குதல். 6) தண்டீஸ்வரநகர் 7 வது மெயின் ரோடு இரு வண்ண கழக கொடிஏற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்குதல்.

100அடிசாலை அந்தோனியார் சாலை பேருந்து நிறுத்தம் அருகே கழகக் கொடியேற்றுதல் 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெறும்

100 அடி சாலை உதயம் ஹோட்டல் அருகே கொடியேற்றி இனிப்பு வழங்குதல்

தரமணி பஸ் நிலையம் அருகில் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல்

## துணை முதல்வர் பிறந்தநாள் விழா -

# 36-வது வட்டத்தில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கல்!

## வட்டச் செயலாளர் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி வேண்டுகோள்!

சென்னை, நவ.27-

தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா இன்று (27.11.2024 புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் 36வது வட்டம் சிவகாமி அம்மையார் காலனியில் அமைந்துள்ள அண்ணா பகுத்தறிவு மன்றத்தில் 36வது வட்ட தி.மு.க. சார்பாக கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கும் விழா நடைபெறுகிறது.

அது சமயம். மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், சார்பு மன்ற நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள். அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - இரா.துரைராஜ் பங்கேற்பு

# சைதை 170 அ வட்டத்தில் கொடியேற்றி இனிப்பு - உணவு வழங்கல்

## வட்டச் செயலாளர் கோட்டூர் மு.சண்முகம் அறிக்கை

சென்னை. பிப். 27

சைதை கிழக்கு பகுதி 170 “அ” வட்டத்தில், இளைஞரணி செயலாளர் , துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி 170, அ வட்ட செயலாளர் கோட்டூர் கோ. சண்முகம் ஏற்பாட்டில் பள்ளிப் பட்டு சேவா சமாஜம் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு இன்று (27-11-2024 புதன்கிழமை) காலை 8:00 மணிக்கு பகுதி செயலாளர் .இரா.துரைராஜ் , கலந்து கொண்டு உணவு வழங்கினர்

வட்ட கழகம் சார்பில் கோட்டூர் கோ. சண்முகம் முன்னிலையில் பல்வேறு தெருக்களில் வட்ட கழக நிர்வாகிகள், (மண்டப சாலையில்) டி,ஞானசேகர், மூ. ராமு, பி. ஜோசப், P. குமார், S.செல்வமணி, , ஏற்பாட்டில் அறுசுவை காலை உணவு வழங்கல்) P. K. சரவணன், J. கௌசல்யா , M.வெங்கடேசன் K.ரகுநாதன், S.இளவரசன் . எஸ்.முத்துச் சோழன் எஸ்.சுகுணா , வி.சியாமளா, ஏற்பாட்டில் களிக்குன்றம் பிள்ளையார் கோயில் தெருவில் காலை 8.30 மணிக்கு சிற்றூண்டி வழங்கும்

மேற்கு கால்வாய் கரை காலை A,B,பிளாக் அருகில் ப. சுரேஷ்குமார், ஏ.சேகர், ஆகியோர் ஏற்பாட்டில் காலை 9.00 மணிக்கு காலைஉணவு 5). அங்காளம்மன் கோயில் தெரு பகுதியில் க.ராஜன், க.பார்த்திபன், விஜய பிரபாகர் ஏற்பாட்டில் காலை:10:00 மணிக்கு கழகக் கொடியேற்றி,அறுசுவை உணவு, பெருமாள் கோயில் தெருவில், கே. எம்.எஸ்.கணேசன் வி.தேவா ஏற்பாட்டில் காலை உணவு அறிஞர் அண்ணா தெருவில் என்.பாபு, எம். குமார், க.தாமு,ஜி.பழனி, இ.யுவராஜ்,ஆகியோர் ஏற்பாட்டில் காலை உணவு, மேற்கு கால்வாய் கரை சாலை G. H பிளாக், பகுதியில் கோ.ராஜன், எஸ். ஆல்பர்ட் , ஆகியோர் ஏற்ப்பாட்டில் கழக கொடியேற்றி அறுசுவைஉணவு, குருவப்பன் தெரு தெரு பெருமாள் கோவில் தெருச்சந்திப்பில். ப.தினகரன், சி.ராஜசேகர், சி.நித்யானந்தம், ஏற்பாட்டில் கழக கொடியேற்றி அறுசுவைஉணவு,

பீலியம்மன் கோயில் தெருவில், ஆர். நரசிம்மன், . சக்கரபாணி, , அமுதமணி,ஆர்.ரவி, எஸ்.நாராயணன், வி.அருள் ஜோதி பி.முருகேசன் டி.கே.மாதவராஜ், ஆகியோர் ஏற்பாட்டில் அறுசுவை உணவு, எல்லையம்மன் கோயில் தெருவில் கழக விஜி ,ச.கோபு ஏற்பாட்டில் அறு

சுவை உணவு.

எனவே மேற்கொண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் 170 “அ” வட்டத்தில் உள்ள பகுதி நிர்வாகிகள் , மாவட்டபிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள் அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி அமைப்பாளர்கள் அமைப்பாளர்கள் இளைஞர் அணியினர், தகவல்தொழில்நுட்ப அணி பாக ஒறுங்கினைப்பாளர்கள் ,BLA2, பாக முகவர்கள் , மகளிர் அணியினர் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் வட்டச் செயலாளர் கோட்டூர் சண்முகம் கேட்டுக்கொண்டுள்ளார்.



சென்னை நந்தனம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை இயக்குநர் அலுவலகத்தில் நேற்று (26.11.2024) மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர் ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் துறையின் பணிகள் குறித்தும், புயல் மற்றும் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வுகூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் – மீனவர் நலத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை இயக்குநர் திருமதி இரா.கஜலட்சுமி, மீன்வளம் மீனவர் நலத்துறை கூடுதல் இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## துணை முதல்வர் பிறந்த நாள் : கா.வீ.தியாகராஜன் தலைமையில்

# பனையூரில் மாற்றுத் திறனாளிகள் காப்பகத்தில் காலை உணவு

## எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. - வி.இ.மதியழகன் எம்.சி. வழங்குகின்றனர்

சென்னை, நவ. 27 -

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்ததாளை முன்னிட்டு கிழக்கு கிழக்கு கடற்கரை சாலை பனையூர் பகுதியில் அமைந்துள்ள லிட்லிட ஹார்ட் மாற்றுத் திறனாளிகள் காப்பகத்தில் காலை உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (27.11.2024) சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் சோழிங்க நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்.அரவிந்தரமேஷ். 15மண்டல குழு தலைவர் விஇ..மதியழகன். ஆகியோர் காலை உணவை வழங்கி சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்ட பகுதி , வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் மாவட்ட , பகுதி, அமைப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

## எஸ்.புஷ்பராஜ் தலைமை! செ.தமிழ்வேந்தன் முன்னிலை!

# திரு.வி.க. நகர் 74-வது வட்டம் - எம்.யோகீஸ்வரன் திருவுருவப்படம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைக்கிறார்!

சென்னை, நவ.27-

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி, 74வது வட்டக் கழகச் செயல்வீரர் எம்.யோகீஸ்வரன் 16-ஆம் நாள் நினைவேந்தல் மற்றும் திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (27.11.2024 - புதன்) மாலை 7 மணியளவில் எண்.1, ஏகாங்கிபுரம் மெயின் தெரு, அயனாவரத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர் எஸ்.புஷ்பராஜ் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் செ.தமிழ் வேந்தன் முன்னிலை வகிக்கிறார். ஜி.கிருஷ்ண குமார், த.வெங்கடேசன் ஆகியோர் துவக்கவுரை யாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு அன்னாரது திருவுருவப்படத்தை திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகிறார்.

இதில் மேயர் பிரியாராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., சரிதா மகேஷ்குமார், பி.உதயசங்கர், என். கிருஷ்ணமூர்த்தி, பெரம்பூர் ஆர். ராஜன், கிணார் ஆறுமுகம், சே.மணிமாறன், வி.பகவத் சிங், பி.சதிஷ், டி.ராஜி, பி.இலின், வி.மதிமாறன், டி.செண்பகவள்ளி, கே.ஆர். சதீஷ், அ.மகேந்திரன், ஜி. சீனிவாசன், ஜி.எபிநேசன், பி.சேகர், அ.அருள், எல்.போஸ், அ.ரவி, எம். பிரபுநிவாஸ், பி.எஸ்.வள்ளல், டி. சரளா, ஆர்.வசந்த், பி.கே. பிரபாகரன், ஆர்.விஷ்ணு, எம். சியோன்ராஜ், எஸ்.விஜியகுமார், ஆர்.மோகன்ராஜ் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் நலத்திட்ட உதவி மற்றும் அன்னதானம் வழங்க நிகழ்ச்சி மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் திருத்தணியில் நடைபெற்றது அமைச்சர் ஆவடி சாமு.நாசர் கலந்துகொண்டு தூய்மை பணியாளர்களுக்கு மற்றும் வியாபாரி ஆட்டோ ஓட்டுநர் நலத்திட்ட உதவி மற்றும் அன்னதானம் வழங்கினார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திருத்தணி எம்.பூபதி, நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், இ.குருதாஸ், எம்.மிதுன் சக்ரவர்த்தி, வி.கிஷோர், ராஜேஸ்வரி ரவீந்திரநாத், கே.என்.சுப்பிரமணி, வி.வினோத் குமார், கூளூர் எம்.ராஜேந்திரன், சி. ஜெ.சீனிவாசன், என்.கிருஷ்ணன், பிடி.சந்திரன், பெ.பழனி, சி.என்.சண்முகம், கே.ராஜேந்திரன், டி.ஆர்.கே.பாபு, நகர மன்ற துணை தலைவர் சாமிராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார், டி.ஆர்.திலீபன், உள்பட பலர் உள்ளனர்



நேற்று (26.11.2024) மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி வடசென்னை மிக உய்ய அனல் மின் திட்டம் நிலை –3 ல் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.க.நந்தகுமார், இயக்குநர் (திட்டம்) திரு. கருக்குவேல் ராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.